# மீண்டும் வேண்டும் ஸ்டாலின் ஆட்சி!

**ஆட்சிப் பொறுப்பேற்று, கடந்த நான்கரை ஆண்டுக்குள்ளாகவே, திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், நாளொரு திட்டம் பொழுதொரு சாதனை என நிறைவேற்றியிருக்கும் நெஞ்சத்தை நிரப்பும் திட்டங்கள் இவை!**

**தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளில், குறிப்பிட்டுச் சொன்னவற்றையும், சொல்லாதவற்றையும், நினைந்து நினைந்து தமிழர் நலன் காத்திட அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்து, எல்லோருடைய மனதிலும் நிலையான இடம் பெற்றுள்ளார் நம் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்!**





1.மகளிர் மனம் மகிழவும், பணம் சேமிக்கவும் விடியல் பயணம் !

2. நோய் தணிக்கும் வழிக்கு, கொரோனா நிதியாக 4000 ரூபாய் !

3.ஆவின் பால் விலையை மூன்று ரூபாய் குறைத்து வழங்கல் !

4. புதுமைப் பெண் திட்டம்!

5. மகளிர் சுய சார்பு காத்திட, மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை !



6. பள்ளியில் பசியின்றிப் பாடம் படித்திட, பள்ளி மாணவ - மாணவியர்க்கு, இந்தியாவுக்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

7.நான் முதல்வன் திட்டம் !

8.இல்லம் தேடிக் கல்வித் திட்டம் !

9.கோடானு கோடி மக்களின் நலன் பேண, மக்களைத் தேடி மருத்துவம் !



10.இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 !

11. உலகின் மூத்த குடியாம் பண்டைத் தமிழர்தம் உயர் தரத்திலான நகர நாகரிகத்தை வெளி உலகம் கண்டுணர, கீழடியில் அருங்காட்சியகம்.

12.சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மாமதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், தொடர்ந்து திருச்சியில் பெருந்தலைவர் காமராஜர் நூலகம், கோவையில் பகுத்தறிவுப் பகலவன் பெரியார் நூலகம்!

13.சென்னை கிண்டியில் உயர் தரத்திலான கலைஞர் மருத்துவமனை !

14.முதல்வர் மருந்தகங்கள் !

15. கலைஞர் கைவினைத் திட்டம் !

16.மாற்றுத்திறனாளிகளை ஜனநாயக ரீதியாக அதிகாரப்படுத்திட, உள்ளாட்சியில் உரிய நியமனப் பதவி .

17.தோழி மகளிர் விடுதிகள்!

18. நமக்கு நாமே !

19. கலைஞர் கனவு இல்லம் திட்டம் !

20.தமிழ்ப் புதல்வன் திட்டம் !

21. ரேசன் பொருட்கள் வீடு தேடிவரும் தாயுமானவர் திட்டம்!

22.ஏறு தழுவுதல் அரங்கம்

23. புதிய முதலீடுகள் புதிய புதிய தொழிற்சாலைகள் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக அமைந்திடஆக்கப்பூர்வமான நடவடிக்கை !

24. பண்டைத் தமிழர் பண்பாட்டுக் கூறுகளை பாறறிய, நெல்லையில் பொருநை அருங்காட்சியகம்!

25. மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம் !

26.பெட்ரோல், டீசல் விலை உச்சத்தில் இருந்தபோது, தமிழ்நாடு அரசின் விற்பனை வரியை ரூ.5 என்ற அளவில் குறைத்தது!

27. மக்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்க, குடியிருப்புப் பகுதிகளில் மாதம்தோறும் முதல்வரின் திட்ட முகாம்கள்!

28.சென்னை கிளாம்பாக்கத்தில் பிரமாண்டமான கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!

29.ஆதிதிராவிடர், பழங்குடியினர் நல வாரியம் அமைப்பு!

**அ. வெற்றியழகன்**
கழக சட்டமன்ற உறுப்பினர்,
வில்லிவாக்கம்



30. மின்சாரம் தொடர்பான குறைகளைக் களைந்து கொள்ள, நுகர்வோர்க்காக,

24 மணி நேரமும் இயங்கும் 'மின்னகம்' என்னும் புதிய மின் நுகர்வோர் சேவை மையம்!

31.தொழிற்கல்விப் படிப்புகளில் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு!

32.மின்னணு வளர்ச்சியைப் பரவலாக்கி முன்னெடுத்திட,மதுரை, வேலூர், திருப்பூர், விழுப்புரம், தஞ்சாவூர், சேலம், திருச்சி, காரைக்குடி, ராசிபுரம், தூத்துக்குடி நகரங்களில் மினி டைடல் பார்க்!

33.1200க்கும் மேற்பட்ட கோயில்கள் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்கு செய்யப்பட்ட ஆன்மிகப் புரட்சி! கோயில்களில் தமிழில் அர்ச்சனை!

34. 1.68 லட்சம் விசைத்தறி நெசவாளர்கள் பயனடையும் வகையில், கட்டணமில்லா மின்சாரம் ஆயிரம் யூனிட்டாக உயர்வு! 73,642 கைத்தறி விவசாயிகள் பயன்பெறும் வகையில், கட்டணமில்லா மின்சாரம் 300 யூனிட்டாக உயர்வு! கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்தில் 10 சதவீதம் அகவிலைப்படியில் 10 சதவீதம் உயர்வு !

35. மீன்பிடித் தடைக்கால உதவித் தொகை உயர்வு!

36. விளையாட்டுத் துறை: தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள், சர்வதேச ஹாக்கி போட்டிகள், சர்வதேச சார்ஃபிங் போட்டிகள் என விளையாட்டுத் துறையில் ஈர்ப்பான மேம்பாடு. இதோடு, ஸ்குவாஷ் உலகக் கோப்பை போட்டிகள், முதல்முறையாக, தமிழ்நாட்டில் கேலோ இந்தியா போட்டிகள்! ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வீரர்களுக்கு ஊக்கத் தொகை!

37. கலைஞர் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்படி, நகரங்கள், மாநகரங்களில் சாலைகள் அமைத்தல், பூங்காக்கள் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றப்படு கின்றன!

38. பத்திரப்பதிவு கட்டணத்தில் பெண்களுக்கு சலுகை !

39. 22 வருடங்களாகப் போராடியும், நிறைவேறாமல் இருந்து வந்த அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கூறுகள் நிரம்பிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் நிறைவேற்றம்!

40. பொங்கல் பரிசுத் தொகையாக 3000!

41. மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டி இல்லா கடன் கூட்டுறவு வங்கியின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் !

**இப்படி இன்னும் ஏராளமான சாதனைகளை எடுத்துச் சொல்லிக் கொண்டே போகலாம்; சொன்னாலும் தீராது, எழுதிக் குவிக்கவும் மாளாது.**




**எனவே இத்தகைய அருஞ் சாதனைகள் என்றென்றும் தொடர்ந்திடவும், தமிழ் மக்கள் மேலும் மேலும் முன்னேறி, வாழ்வில் வற்றா வளம் காணவும், "மீண்டும் வேண்டும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சி!"**